JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | கிருஷ்ணன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 29.08.2024

**முதல் விசாரணை**

நான் வெயிக்காலி பட்டியில் குடியிருந்து வருகிறேன். பலசரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் எனக்கு பக்கத்து தெருக்காரர்கள். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரில் உள்ள மாயவன் கோயிலில் சீட்டு நடத்தினார்கள். என்னிடம் ஆஜர் எதிரிகள் கோயிலில் சீட்டு நடத்துவதாகவும் அதனால் என்னை சீட்டு போடச்சொன்னார்கள். நான் சரி என்று சொல்லி ரூபாய் 61000 மதிப்புள்ள சீட்டில் ஐந்து சீட்டுகளும், ரூபாய் 62000 மதிப்புள்ள சீட்டில் மூன்று சீட்டுகளும், ரூபாய் 50000 மதிப்புள்ள சீட்டில் இரண்டு சீட்டுகளும் கட்டச்சொல்லி சொன்னதன் பெயரில் நான் செலுத்தினேன். மேற்படி சீட்டுகள் வாரச்சீட்டு. ரூபாய் 61000 சீட்டில் மொத்தம் 113 வாரங்கள் நடக்கும். ரூபாய் 62000 சீட்டில் 123 வாரம். ரூபாய் 50000 சீட்டில் 101 வாரம். இந்த சீட்டுகளுக்கு நான் மொத்தம் ரூபாய் இரண்டு லட்சத்தி ஆயிரத்து அறுநூற்று முப்பது ரூபாய் செலுத்தினேன். 2019 ம் ஆண்டு சீட்டை நிறுத்தினார்கள். நான் முதலில் ஆஜர் எதிரி மாயவனிடம் கேட்டேன். அப்போது புண்ட மகனே உனக்கு சீட்டு தரமுடியாது என்று

சொன்னார். நான் எதிரி மாயவநாதனிடம் கேட்டேன். அவர் தேவடியா மகனே தரமுடியாது என்று சொன்னார். ஒவ்வொரு ஆட்களாக கேட்டோம் பணம் தரவில்லை. 2019 ம் ஆண்டு பத்தாவது மாதம் காவல் நிலையத்தில் நாங்கள் மனு கொடுத்தோம். நான் மனு கொடுக்க சென்ற போது என்னுடன் ராஜமணி நாடார் வந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். என்னுடன் சுமார் 75 நபர்கள் சீட்டு செலுத்தினார்கள். அந்த சீட்டு செலுத்திய நபர்களும் சேர்ந்து வந்தார்கள். போலிசார் அவர்களிடம் கேட்டார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகள் சீட்டு சம்மந்தமான புத்தகங்களை எரித்துவிட்டார்கள். புகார் மனு அசா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் புகார் மனுவில் எழுதியிருந்தேன் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் எந்த வருடத்திலிருந்து சீட்டு செலுத்தினேன் என்றால் 2010 ம் ஆண்டிலிருந்து செலுத்தினேன். 2010 ல் எத்தனை ரூபாய் சீட்டு ஆரம்பிக்கப்பட்டது என்றால் ரூபாய் ஐம்பதாயிரம். ரூபாய் 61000 சீட்டு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2018 ம் ஆண்டு. 62000 சீட்டு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2017 ம் ஆண்டு. ரூபாய் 50000 சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 100 நபர்கள், 101 வதாக சீட்டு நடத்துபவர் பணம் தவணை செலுத்தாமல் ஒரு சீட்டு எடுக்கொள்வார். மேற்படி சீட்டு 101 வாரங்கள் நடக்கும் என்றால் சரிதான். ரூபாய் 61000 சீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 122 நபர்கள், 123 வதாக சீட்டு நடத்துபவர் பணம் தவணை செலுத்தாமல் ஒரு சீட்டு எடுத்துக்கொள்வார். ரூபாய் 62000 சீட்டில் எத்தனை நபர்கள் என்றால் 124 நபர்கள், 125 வதாக சீட்டு நடத்துபவர் பணம் தவணை செலுத்தாமல் ஒரு சீட்டு எடுத்துக்கொள்வார். என்னுடைய புகார்மனுவிலும், போலிசார் விசாரணையிலும் ரூபாய் 50000 சீட்டில் 100 நபர்கள் என்றும் ஒரு நபராக பணம் செலுத்தாமல் வரக்கூடிய பணத்தை சீட்டு நடத்துபவர் எடுத்துக்கொள்வார் என்று புகாரில் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய புகார்மனுவிலும், போலிசார் விசாரணையிலும் ரூபாய் 61000 சீட்டில் 122 நபர்கள் என்றும் ஒரு நபராக பணம் செலுத்தாமல் வரக்கூடிய பணத்தை சீட்டு நடத்துபவர் எடுத்துக்கொள்வார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய புகார்மனுவிலும், போலிசார் விசாரணையிலும் ரூபாய் 62000 சீட்டில் 124 நபர்கள் என்றும் ஒரு நபராக பணம் செலுத்தாமல் வரக்கூடிய பணத்தை சீட்டு நடத்துபவர் எடுத்துக்கொள்வார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என்னுடைய புகாரில் சொல்லியுள்ள நபர்பகள் அனைவரும்தான் சீட்டு போட்டவர்கள் என்றால் சரிதான். நான் அந்த புகாரில் சொல்லியுள்ள நபர்களுக்காக அவர்கள் சொல்லித்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2010 ல் ஆரம்பித்த 50000 சீட்டு எப்போது முடிந்தது என்றால் 2013 ல் முடிந்திருக்கும். நான் 2010 ல் எத்தனை சீட்டு எடுத்தேன் என்றால் அது முன்பே முடிந்து விட்டது.

ரூபாய் 61000 சீட்டில் நான் எத்தனை சீட்டு எடுத்தேன் என்றால் எடுக்கவில்லை.

ரூபாய் 62000 சீட்டில் நான் எத்தனை சீட்டு எடுத்தேன் என்றால் எடுக்கவில்லை.

நான் ஒவ்வொரு வாரமும் சீட்டு ஏலம் விடும்போது கலந்துகொள்வேன் என்றால் சில வாரங்கள் கலந்துகொள்வேன். அவ்வாரு சில வாரங்கள் கலந்துகொண்ட ஏலத்தில் யார் சீட்டு எடுத்தார் என்றால் மற்றவர் எடுத்தார்கள்.

ரூபாய் 61000 சீட்டில் என்னைத்தவிர எத்தனை பேர் சேர்ந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் சுமார் 40 பேர் சேர்ந்தார்கள்.

ரூபாய் 62000 சீட்டில் என்னைத்தவிர எத்தனை பேர் சேர்ந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் சுமார் 42 பேர் சேர்ந்தார்கள்.

நீதிமன்ற கேள்வி – ஒரு நபர் ஒரு சீட்டுத்தான் போடுவாரா நிறைய சீட்டு போடுவாரா என்றால் நான் இரண்டு சீட்டுகள் போட்டேன். அது போல மற்ற நபர்களும் சீட்டுகள் போட்டார்கள்.

ரூபாய் 61000 சீட்டின் காலம் முடிந்துவிட்டது என்றால் இல்லை. 2019 ல் முடியவில்லை. என்னுடைய கணக்குப்படி ரூபாய் 61000 சீட்டு எப்போது முடியும் என்றால் 2020, 2021 ல் முடியும்.

ரூபாய் 62000 சீட்டின் காலம் எப்போது முடிந்தது என்றால் புகார் கொடுக்கும்போது இரண்டு சீட்டுகள் முடிய வேண்டிஇருந்தது.

நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது நான் புகாரில் சொல்லியுள்ள நபர்கள் மட்டுமே வந்தார்கள் என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதினார் என்றால் காவலர் ஒருவர் எழுதினார். நான் புகார் கொடுக்க எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 7.00 மணி இருக்கும். புகாரை கொடுக்கும்போது சுமார் 9.00 மணி இருக்கும் என்றால் சரிதான். புகாரில் என்னைத்தவிர என்னுடன் வந்தவர்கள் எத்தனை பேர்

கையொப்பம் செய்தார்கள் என்றால் நாங்கள் மூன்று பேர். என்னை தவிர மூன்று பேர் கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் எதிரி மாயவன் வீட்டிற்கும் மாயவன் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 அடி இருக்கும். நான் எதிரியிடம் பண்ம் கேட்டதாக சொல்லியுள்ளதில் எத்தனை மணிக்கு கேட்டேன் என்றால் காலை 7.00 மணி இருக்கும். நான் கேட்கும்போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 25 பேர் இருந்தார்கள். நான் பணம் கேட்கும் போது காலை 7.00 மணி இருக்கும் என்றும் அப்போது சுமார் 25 பேர் இருந்தார்கள் என்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ராஜா மணி நாடார் மகன் பெயர் என்ன என்றால் மகேஷ் மாயவன். மகேஷ் மாயவன் ஒரு காலத்தில் வாரச்சீட்டு நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி மகேஷ் மாயவன் அந்த சீட்டை மாயவன் கோவிலில் வைத்து நடத்தினார் என்றால் சரிதான். மகேஷ் மாயவன் சீட்டு பணத்தை திருப்பி கொடுக்காமல் வெளியூர் ஓடி விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி மகேஷ் மாயவன் முழு பணத்தையும் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

தற்போது மாயவன் கோயிலை இரண்டு தலைவர்கள் நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த சீட்டு பணம் செலுத்தாமல் எடுக்கப்படும் ஒரு சீட்டுக்கூரிய பணம் கோவிலுக்கு என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு வரக்ககூடிய ஒரு சீட்டு கரைப்பார் பணத்திலிருந்து கோவில் பணிகள் கட்டிடங்கள் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

ஆஜர் எதிரிகள் இரண்டுபேரும் மாயவன் கோவில் வரித்தார்கள் என்றால் சரிதான்.

நான், ராஜா மணி நாடார், கானாவூர் பால முருகன், வெய்க்காலிப்பட்டி ஞானமுத்து மனைவி சாந்தி, மேட்டுர் குமரேசன், செல்வராஜ் மனைவி ஜானகி, குணசீலன், குத்தால ராமசுந்தர நாடார் மகன் மாயவன், வெய்க்காலிபட்டி பாலமுருகன் ஆகியோர் மாயவன் கோவிலுக்கு வரித்தாரர்கள் என்றால் சரிதான்.

நான் ராஜா மணி நாடார், கானாவூர் பால முருகன், வெய்க்காலிப்பட்டி ஞானமுத்து மனைவி சாந்தி, மேட்டுர் குமரேசன், செல்வராஜ் மனைவி ஜானகி, குணசீலன், குத்தால ராமசுந்தர நாடார் மகன் மாயவன், வெய்க்காலிபட்டி பாலமுருகன் ஆகியோர் தற்போது ராஜா மணி நாடார் மகன் மகேஷ் மாயவன் தலைமையில் இருக்கிறோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் பணம் தரவில்லை என்பதால் தற்போது அவரது தலைமையில் இருக்கிறோம்.

தற்போது மாயவன் கோவில் இரண்டு தலைவர்களில் ஒரு தலைவராக இருக்கும் இரஜதுரை பொன்னுச்சாமி என்ற பொன்ராஜ் என்பவரும் எங்களுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் ஆமாம்

அவரிடம் கோவில் பணம் போயிவிட்டது என்று கேட்டதால் அவரும் வந்துள்ளார்.

ஆஜர் 1ம் எதிரி மாயவனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் ஆஜர் 1ம் எதிரியிடம் நான் பணம் கேட்டு அவர் என்னை ஏசினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. புகாரில் செல்லத்துரை மகன் ரவிக்குமாருக்கும் ஆத்தியப்பன் மனைவி சுதாவுக்கும் இந்த விவரம் தெரியும் என்று புகார் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரவிக்குமாரின் தகப்பனார் பெயர் செல்லத்துரை என்பதை தவிர வேறு பெயர் இல்லை என்றால் சரிதான். சுதாவின் கணவர் பெயர் ஆத்தியப்பன் என்பதை தவிர வேறு பெயர் இல்லை என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி மாயவன் தற்போது மேற்படி மாயவன் கோயிலில் ஒரு தலைவர் என்றால் சரிதான். ஆஜர் 1ம் எதிரி மாயவனை ஊர் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு எங்கள் வரிதாரரில் ஒருவரான மகேஷ் மாயவன் சீட்டு நடத்திவிட்டு பணத்தை கொடுக்காததால் ஆஜர் 1ம் எதிரி பணத்தை பெற்றார் என்று ஒரு பொய் புகார்கொடுத்து அதற்கு பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் 1ம் எதிரி மாயவன் ஒரு அரசு ஆசிரியர் என்பதால் அவர் மீது பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் அவரை தலைவர் பதவில் இருந்து நீக்க வேண்டுமென்று மிரட்டுவதற்காக மற்ற சாட்சிகளின் ஆலோசனையின் பேரில் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல. பணம் கேட்டதாக சொல்லும் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் ராஜா மணி நாடார் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2010 ல் இருந்து எங்கள் ஊர் மாயவன் கோவிலுக்கு யார் தலைவராக இருந்தார் என்றால் ஆஜர் 1ம் எதிரி மாயவன் தான் இருந்தார். தற்போது கோவிலில் இரண்டு பிரிவுகாளாக இருந்து திருவிழா நடத்துகிறோம் என்றால் சரிதான். எப்போது இரண்டு பிரிவாக வந்தது என்றால் 2021ம் ஆண்டிலிருந்து இரண்டு பிரிவாக வந்தது. எதற்காக இரண்டு பிரிவாக வந்தது என்றால் ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தி பணம் திருப்பி கொடுக்காததால் அதை கேட்டபோது திருப்பி கொடுக்கவில்லை என்பதால் இரண்டு பிரிவு ஆனது. கோவில் கொடை நடத்துவதற்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்பு என்று கற்றறிந்த வழக்கறிஞரிடம் வினவியபோது 1ம் எதிரி தலைவராக இருப்பதை நீக்க வேண்டுமென்று பொய் புகார் கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார், 2021ம் ஆண்டில்தான் இரண்டு பிரிவாக இருப்பதாக மேற்படி சாட்சி தெளிவாக

சொல்லியிருப்பதால் திருவிழா சம்மந்மான கேள்விக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்று இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 148ன் கீழ் முடிவு செய்யப்டுகிறது. 2021ன் ஆண்டில் பிரிந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவிலில் வேறு யாரும் சீட்டு நடத்துவர்களா என்றால் இல்லை ஆஜர் எதிரி இரண்டுபோரும்தான் நடத்துவார்கள். என்னை போல மற்ற நபர்களும் ஒரே சீட்டுத் தொகைக்கு இரண்டு, மூன்று சீட்டுகள் போடுவார்கள் என்றால் சரிதான். ஒரே நபர் ஒரே சீட்டு தொகையில் ஐந்து சீட்டு செலுத்தினால் அதை தொடர்ந்து எடுக்க முடியுமா என்றால் முடியாது. அதை எப்படி எடுக்கலாம் என்றால் ஒரு சீட்டு எடுத்தபிறகு பத்து சீட்டுகள் கழித்து எடுக்கலாம் அதனை ஆஜர் எதிரிகள் பணம் தாராமல் எடுத்துள்ளார்கள். புகாரை யார் எழுதினார் என்றால் SI எழுதினார். புகார் மனு கொடுத்தபின்பு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

நீதிமன்ற கேள்வி – புகார் கொடுத்த போது போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

ரூபாய் 62000 சீட்டில் இரண்டு சீட்கள் தான் இருக்கும் நிலையில் எனக்கு செலுத்தியதாக சொல்லும் மூன்று சீட்டுகளை முன்பே எடுத்திருக்க வேண்டும் என்றால் ஆஜர் எதிரிகள் கடைசி சீட்டு உங்களுக்குதான் என்று சொல்லியே பணம் தராமல் இருந்தார்கள். மற்றவர்களிடம் அப்படித்தான் சொல்லி பணம் கொடுக்காமல் இருந்துள்ளார்கள். ஆஜர்எதிரிகள் கடைசி சீட்டு என்று சொல்லி பணம் தராமல் இருந்தார்கள் என்று யொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி 1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi